உ

கடவுள் துணை.

# தணிகை தயாநிதிமாலை.

## தி. கந்தப்பதேசிகர்

திருவாய்மலர்ந்தருளியது.

காமராசர் பல்கலைக்

இஃது

சிறுமணவூர்,

முனிசாமிமுதலியாரவர்களால்

தமது

சென்னை சூளை,

சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1904.

உ

கணபதி துணை.

# தணிகை தயாநிதிமாலை.

நீரணிமலர்கொண்டருச்சனைபுரியே னின்றிருத்தாள்பணிந்தறியேன்
சீரணிதமிழாலேத்தவுமறியேன் றீவினைதொலைத்தருள்புரியாய்
பூரணியுலககாரணியிமையப் பொருப்பிறையளித்தமுக்கண்ணி
யாரணிவிமலையருள்செருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௧)

நீதியுமறியேனெறிகளுமறியே னின்றிருப்புகழனுதினமு
மோதியுமறியேனாயினும்வரங்க ளுகந்தெனக்கருள்புரிந்திடுவாய்
சாதியுங்குரவும்வேங்கைகுங்குமமுஞ் சந்தனங்களுமணங்குலவு
மாதியேம்பரமனருடிருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௨)

எண்ணிலேனுனதுசடக்கரமதனை யிருந்தவநோன்புநல்விரதம்
பண்ணிலேன்றுதிகள்படித்திலேனதிக பாவியேன்றனக்கருளுவையோ
விண்ணில்வானவர்தஞ்சிறைதனைத்தவிர்த்து வேண்டியவரங்களையளித்த
வண்ணலேதணிகைப்பதிதனிலுறையு மாறுமாமுகதயாநிதியே. (௩)

முன்செய்தீவினையோபின்செய்திவினையோ மூண்டதுநல்குரவதனுக்
கென்செய்கேனடியேன்றுயர்களைந்துயர்வீ டெனக்கருள்செய்யுநாளுளதோ
மின்செய்நூலிடையாள்வேடர்தஞ்சிறுமி விரும்பிவாழ்தினைப்புனமதனி
லன்புசேர்கணியாய்நின்றிடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௪)

காதரமனைத்துந்தொலைந்துனதடியைக் காட்டியுன்னடியரிற்கூட்டிச்
சீதரன்பிரமனறியொணாவீட்டிற் சேர்த்தியாட்கொள்ளுநாளுளதோ
பூதரமனையசிங்கமாசூரன் பொருகரிமுகனசுரேச
ஞாதரமனைத்துந்தொலைத்திடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௫)

மேருவைச்சேருங்காகம்பொன்னிறமாய் விளங்கல்போலுன்னடிக்கமலச்
சாருவைச்சேருமெனையுநின்னடியார் தம்மொடுங்கூட்டியாண்டருள்வாய்
தாருவைச்சேரும்வல்லிபோலிருவர் தனம்படவிளங்குதிண்புயனே
யாருவப்புடன்வானோர்பணிதணிகை யாறுமாமுகதயாநிதியே. (௬)

சிவனடியவருக்கிடர்புரிந்தாலுந் தீவினைபலபுரிந்தாலும்
பவநெறிக்குரியபாவமேசெயினும் பஞ்சபாதகங்கள்செய்தாலுந்
தவநிலைகுலையத்தாழ்வுசெய்தாலுஞ் சமித்தெனைப்புரந்தளித்திடுவா
யவனவளதுவாயமர்திருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௭)

சிறப்பொடுபூசை புரிகிலேனெனினுஞ் சினகரம்வலம்புரியாமன்
மறப்பொடுநிலத்திற்றுட்டரோடிணங்கி வாய்மையைப்புகல்கிலேனெனினும்
பிறப்புடனிறப்பாங்கடலழுந்தாமற் பிரசமாமலர்ப்பதந்தருவா
யறப்பணிபுரிவோர்க்கருடிருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௮)

பஞ்சபாதகமேபுரிகினுமுன்னைப் பவந்தொறுந்தீமைசெய்திடினுந்
தஞ்சநீயெனவந்தடைந்திடுங்கொடியேன் றன்பிழைபொறுத்துநல்வரங்கள்
விஞ்சவேயருளியெனைப்புரந்திடலுன் மேற்பிழைசொல்பவருளரோ
அஞ்சவாகனனுக்கருடிருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௯)

மழையிலாப்பயிர்போல்வாடினேன்கருணை மழைபொழிந்தியான்முனம்புரியும்
பிழையெலாம்பொறுத்துப்பெருவரமளித்துப் பேயனேன்காணவந்தருள்வாய்
தழையெலாங்கீழாய்விண்ணில்வேரோட்டுஞ் சலதிமாமரந்தனைப்பிளந்த
வழகனேதணிகைமலையில்வீற்றிருக்கு மாறுமாமுகதயாநிதியே. (௧௦)

மந்தரமனையபாவமேசெயினும் வல்வினைபலபுரிந்திடினும்
பந்தனைப்பிறப்பிலழுந்தினுமுனது பங்கயப்பாதநான்மறவேன்
சுந்தரமுகுந்தன்மருகனேயடியர் துயரெலாந்தவிர்த்தசற்குருவே
யந்தரத்தவர்நின்றருச்சனைபுரியு மாறுமாமுகதயாநிதியே. (௧௧)

துக்கசாகரத்திலழுந்தியெந்நாளுந் தொலைவிலாக்கவலைநோயடைந்து
மிக்கபேரறிவுகுலைந்துநான்புவியில் வீணிலேதிரிவதுமழகோ
தக்கவாழ்வருளியுலகெலாமதிக்குந் தனியரசெனக்கருள்புரிவாய்
அக்குமாலையனீன்றருடிருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௧௨)

இந்திரன்பதமுமிமையவர்பதமு மெண்டிசைக்காவலர்பதமுஞ்
சந்திரன்பதமுஞ்சூரியன்பதமுஞ் சக்கரமாயவன்பதமுங்
கந்தமாமலரோன்பதவியுமுனது கடைக்கணுதவியபதமே
யந்தவாறெனக்குமருடிருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௧௩)

வேண்டியவரங்கள்பற்பலவுதவி வேண்டியசெல்வமுமளித்துச்
சேண்டருமுனதுபாதபங்கயத்திற் செலுத்திடுபத்தியுமருளாய்
தூண்டருசெம்பொற்புயங்கள்பன்னிரண்டுந் துதிப்பவர்பகையறுப்பவனே
யாண்டலைக்கொடியைப்பிடித்திடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௧௪)

பெரியவர்தமக்குப்பிழைபுரிந்தேனோ பிறர்மனை தனைவிழைந்தேனோ
குருமொழியிகழ்ந்துபழித்துரைத்தேனோ கொடியயாமிடியினான்மெலிவேன்
திருவருள்புரிந்துதீவினையகற்றிச் செல்வமுங்கல்வியுந்தருவாய்
அரியயன்பணியுமொருதிருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௧௫)

மட்டிலாப்பாவந்தனைப்புரிந்தாலு மலரடிக்கன்பிலாதுழலுந்
துட்டரோடுறவுசெய்திருந்தாலுந் தூயநின்சந்நிதியடுத்தால்
விட்டிடாதின்னுமிருக்குமோவினை விரித்துநீயெனக்குரைத்திடுவாய்
அட்டமாசித்தியருள்செருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௧௬)

வாசவன்மலரோன்வேண்டுநல்வரமும் வாழ்வுநீதந்தனைமுன்ன
நீசனேன்வேண்டும்வரமுதவாம னிற்பதுநீதியோவுரையாய்
பேசியேகலியில்வரந்தருந்தெய்வம் பிறரிலையெனவுனையடுத்தேன்
ஆசறுமுனிவர்தவஞ்செயுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௧௭)

வெந்தநீரணியும்வேதியர்மறையுள் விதித்திடும்விதிவழிநடப்ப
தெந்தநாளுனதுதிருவடிக்கன்பா யிருப்பதுமெந்தநாளுரையாய்
இந்துசேகரனுக்கோமெனும்பொருளை யிருஞ்செவியிடைப்புகல்குரவா
வந்தமாதியுநீங்கிடுந்திருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௧௮)

மனந்தனிலுனதுதிருவுருநினைக்க வாயினாலுன்புகழ்வழுத்தக்
கனந்தருதலையாலுன்கழலிறைஞ்சக் கசடனேற்கென்றருள்புரிவாய்
தனந்தருமளகைக்கதிபதிதோழன் றந்தருண்மயூரவாகனனே
யனந்தனும்பணியுமொருதிருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௧௯)

பாயுமாமதஞ்சேர்மதகரிபோலப் பற்பலதீங்குசெய்திடினு
நீயுமோரறிவாமங்குசமதனா னிறுத்தியாட்கொள்ளுநாளுளதோ
தாயுமாயுயிர்க்குத்தந்தையாயுலகந் தனைப்புரந்தருள்குருபரனே
யாயுமாமறைகடேடருந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௨௦)

காலமேயெழுந்துன்றிருவடிநினைந்து காமலர்பறித்துநின்பூசை
சாலவேபுரியாதுழலுநாயடியேன் றனக்கருள்புரிவதென்றுரையாய்
நீலமாமயின்மேலேறியோர்நொடியி னிலவுலகெலாம்வலம்வருவாய்
ஆலமாமிடற்றோனருள்செருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௨௧)

மாயிரும்புவியின்மனிதராய்ப்பிறந்து வண்டரைமதனெனப்புகழ்ந்து
போயிரந்துண்ணும்புலவர்நின்கமலப் பொன்னடிகாண்பதற்கெளிதோ
தாயிரங்காதபிள்ளைபோலடியேன் றவிப்பதுநீதியோவுரையாய்
ஆயிரங்கதிரோன்பணிதிருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௨௨)

சாத்திரமறிந்துன்றிருவடிக்கமலந் தன்னையுமருச்சனைபுரியேன்
பாத்திரமறிந்துபிச்சையிட்டறியேன் பாவியேனுய்யுநாளுளதோ
காத்திரம்படைத்தசிங்கமாசூரன் கவிழ்ந்திடவயில்விடுத்தவனே
யாத்திரண்மேய்த்தோன்மருகனேதணிகை யாறுமாமுகதயாநிதியே. (௨௩)

காகமுநரியுந்தமதெனுமுடலைக் காதலித்துலகெலாமலைந்து
சோகமுந்துயரும்படைத்தநாயடியேன் றுயர்கெடவருளுநாளுளதோ
மாகமுஞ்சுரரும்வாழ்ந்திடச்சூரன் மடிந்திடவேலெறிந்தவனே
யாகமம்புகலுமுயர்திருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௨௪)

நிலையிலாப்பொன்னுநிலையிலாமண்ணு நிலையிலாப்பெண்ணையுநினைந்து
கலையிலாவுணர்வோடெங்கணுமயங்குங் கசடனேனுய்யுநாளுளதோ
தலையிலாக்கவந்தமெண்ணிலநடிப்பத் தருவர்தஞ்சென்னியைத்தடிந்தோய்
அலையுலாஞ்சுனைசேர்தணிகைமால்வரைவா ழாறுமாமுகதயாநிதியே. (௨௫)

திக்குவேறிலையுன்றிருவடியல்லாற் றீயனேன்குறையெலாம்புகன்று
மிக்கபோருளைப்புரிந்திடாதிருந்தான் மெய்யருள்பொய்யெனப்படுமோ
விக்கணந்தனிலேவேண்டியவரங்க ளீந்துநல்வாழ்வுதந்தருள்வா
யக்கமீராறுபடைத்திடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௨௬)

உனதுமாமலையைத்தினம்வலம்புரிந்து முபாசனைசெய்திரந்திடினு
மெனதுதீவினையைத்தடிந்தருள்புரியா திருப்பதுமுனக்கழகியதோ
சனகனேமுதலாமுனிவருங்கமலத் தவிசினோனுநெடுவிண்ணவரு
மனகனேயெனவாழ்த்தெடுத்திடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௨௭)

பழியிலாவுடலும்பயமிலாமனமும் பாதகத்துடன்படாச்செயலும்
கழிவிலாவயதுங்குறைவிலாத்தனமுங் கடும்பகைதானிலாவரசு
மொழிவிலாவறமுமிழிவிலாக்கதியு முனதடிநம்பினேற்கருள்வா
யழிவிலாப்பதவியருள்செருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௨௮)

படைக்கலஞ்சுமந்துபகைவரைத்தடிந்து பாரெலாமொருதனியாண்டு
மடைக்கலஞ்சுமந்தமகளிரைப்புணர்ந்து மைந்தரும்வாழ்வுமேசிறந்து
கொடைக்கலமிலாதுகொடுத்திடுநிதியுங் குலவுமுன்கருணையென்றறிந்துன்
அடைக்கலம்புகுந்தேனருள்புரிதணிகை யாறுமாமுகதயாநிதியே (௨௯)

காலையிலெழுந்துமஞ்சனமாடிக் கால்களால்வலஞ்செயவுச்சி
வேலையில்டியார்பசிகெடச்சமைத்து விருந்துசெய்வித்திடவந்தி
மாலையிற்றூபதீபமுமேற்றி மகிழ்ந்திடும்பேறெனக்குதவா
யாலையங்கழனிசூழ்திருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௩௰)

குங்குமம்புனுகுசந்தனமகரு குற்குலுகற்புரமருவேர்
பைங்கருங்குவளைதண்புனல்கொடுநின் பதமலரருச்சனைபுரியும்
புங்கவரடிக்குற்றேவல்செய்தொழுகும் புண்ணியமெனக்குவந்துறுமோ
வங்குசபாசன்றம்பியாந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௰௧)

நீதியோவுனக்குநான்வெகுநாளாய் நின்றிருச்சந்நிதியடுத்தேன்
சேதியாவையுமேசெப்பினுங்கேளாச் செவிடர்போலிருப்பதிங்கழகோ
வோதுவாயொருசொலுண்டிலையென்ன வுனக்குநானடிமையுமலவோ
வாதியேநடுவேயந்தமேதணிகை யாறுமாமுகதயாநிதியே. (௰௨)

கார்த்திகைவிரதந்தனைமறந்தேனே கந்தசஷ்டியிற்பிழைத்தேனே
தோத்திரஞ்செய்யுந்தொழின்மறந்தேனே துணையடிக்கன்பொழிந்தேனே
பாத்திரங்கொண்டுபலிக்குழலாமற் பாவியேன்றுயர்களைந்திடுவா
யாத்தர்கடுணையாய்வளர்திருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௰௩)

கொடியவருறவேகொண்டிருந்தேனே கொடுவழக்கிடைதவறினனே
குடிமனையவள்கற்பினையழித்தேனே குற்றங்கள்பலபுரிந்தேனே
மிடியுறுதமியேன்றுயரெலாந்தவிர்த்து வேண்டியசெல்வநீயருள்வா
யடியவர்துணையாய்வருந்திருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௰௪)

செங்கதிருலவுமுலகெலாமுலவித் திரிந்தொருசாண்வயிற்றினுக்குக்
கங்குலும்பகலுமிரையினைத்தேடுங் கயவனேனுய்யுநாளுளதோ
சங்கரன்மகனேசதுமுகன்குருவே தயித்தியர்தங்குலப்பகையே
யைங்கரன்றுணையேயுயர்திருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௰௫)

நாரியர்க்கிரங்கிமதனனூல்படித்து நயம்பெறுசன்னைகள்பேசிப்
போரியல்கலவிக்கொருபெரும்புலியாம் புல்லியனுய்யுநாளுளதோ
நீரியல்கமலமலரினோன்சிரத்தி னீண்டவங்குலியினாற்புடைத்தா
யாருயிர்க்குயிராய்வளர்திருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௰௬)

குமரனாய்விருத்தக்கிழவனாயுடலங் கூனொடுநரைதிரைகொண்டு
தமரெலாமிகழவுயிரகல்பொழுதுஞ் சரவணபவவெனாருடலங்
கமரிலேயுகும்பாலெனப்படுமவர்க்கோர் கதியுமேயிலையெனப்படுமா
லமரெலாங்கடந்ததணிகைமால்வரைவா ழாறுமாமுகதயாநிதியே. (௰௭)

கருவியோர்முப்பத்தாறினாலியங்குங் காயமோடிருநிலஞ்சுவர்க்க
மருவியேதிரிந்துபிறந்திறந்துழலு மடையனேனுய்யுநாளுளதோ
குருவியோட்டியவேட்டுவக்குலமகளிர் குலவியசாரலிற்செந்தே
னருவிபாய்ந்திழியுந்தணிகைமால்வரைவா ழாறுமாமுகதயாநிதியே. (௰௮)

மாவிருந்தினர்தம்பசிகெடவுதவும் வண்மைதந்துடல்விடும்பொழுது
பூவிருந்தவனுமாயனுங்காணாப் பொன்னடிநீழறந்தருள்வாய்
கோவினம்பயில்செந்தூர்பரங்குன்று குன்றுதோருடல்சோலைமலை
யாவினன்குடியேரகம்பயிறணிகை யாறுமாமுகதயாநிதியே. (௩௯)

செறுவியாயகந்தைபலபுரிந்திடினுங் கெண்டைவாள்விழியினர்கலவி
யுறுவியாதியினாலுனைமறந்திடினு முறுபிழைபொருத்தருள்புரிவாய்
மறுவிலாக்கற்பின்வள்ளிதெய்வானை மணந்திடுமெணிவரைமார்பா
வறிவினோறிவாயொளிர்திருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௪௦)

தேனிலங்கியசொன்மாதரார்வயிற்றிற் றிங்களீரைந்துமுட்டங்கி
நானிலந்தனிலேயினிப்பிறவாம ஞயினேற்கருள்புரிந்திடுவா
யூனிலங்கியவானவர்களுமறியா யோகியர்மனத்திலேவிளங்கு
மானிலைந்தாமெரனருடணிகை யாறுமாமுகதயாநிதியே. (௪௧)

மன்னவன்மகனையடுத்திடிற்பெரிய வாழ்வினையடுத்தபோதளிப்பான்
பின்னலஞ்சடையுன்பிதாவினையடுத்தாற் பெரிதுநாட்செல்லுமென்றறிந்தே
யுன்னைவந்தடுத்தேனுதலாற்செல்வ முரைத்திடுமுன்னெனக்களிப்பா
யன்னமென்னடையார்பயில்செருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௪௨)

பகலினுமிரவுமுண்டுடுத்துறங்கும் பயனலாதொருபயனறியேன்
புகலரும்பரமானந்தவாரிதியிற் புகுவதெக்காலமோவுரையா
யிகலுமுப்புரங்கடழலெழச்சிரித்த விறையவனுதல்விழிபிறந்தோ
யகிலுடைந்தாபமுகினிகர்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௪௩)

குருபரனெனும்பேருனக்கலாதெவர்க்குக் கூறுநான்மறைகளாதலினாற்
றிருவடிநிழலிலெனைவிடாதிருத்தத் திருவருள்புரிகுவதரிதோ
பொருகரிவதனனொடுகிரவுஞ்சம் பொடிபடவயிலெறிந்தவனே
யருவுடனுருவாயொளிர்திருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௪௪)

நித்திரைதனிலுங்குத்திரம்புரியு நினைவுளேனுன்றிருவடியைப்
பத்திரம்புனல்கொண்டருச்சனைபுரிந்து பரகதியடையுநாளுளதோ
சித்திரக்கலாபமயின்மிசையேறிச் செகமெலாநொடிவலம்புரிவோ
யத்திரவிழியார்நடஞ்செயுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௪௫)

கணுமுதிர்கருப்பஞ்சிலையிணைவளைக்குங் காமனைவென்றமாதவர்க
ணணுகிருசரணபங்கயமலரி னறவினைப்பருகுநாளுளதோ
வெணுமொருநொடியின்மேருவையணுவா யியற்றுவையிதற்குமாமுக
வணுவையோமேருவாக்கிடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௪௬)

மனுதியைம்பொறியுன்வழிக்கொடுநடந்து மருவுமைம்புலனுகர்ந்திடினுங்
கனுவொடுபேய்த்தேரெனப்படுமுலகைக் கண்டுமெய்யெனமயங்குறினு
மெனுதியென்றுனையேநினைத்தனுதினமு மேத்திடுஞ்செல்வமேயருள்வாய்
அனுதியேயுயிர்க்குத்துணையதாந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (சஎ)

வையமுற்றினும்போய்க்கங்கையேமுதலா மாநதிபலபடிந்திடினுந்
துய்யநற்றலங்கடோறுமினிதடைந்து துணைக்கையாற்றொழுதுவாழ்த்திடினுஞ்
செய்யநின்றணிகைக்கிரியினையணையார் சிவகதியடைகுவதரிதே
யையமிட்டுணுமாதவருளத்திருக்கு மாறுமாமுகதயாநிதியே. (சஅ)

முந்தைநல்வினையால்வந்துமானிடராய் முதுநிலந்தனிலவதரித்தும்
வந்தனைபுரியாதுண்டுடுத்துழலு மக்களில்வானரப்பிறப்பே
நிந்தனையறியாநற்பிறப்பாகு நீதியொன்றறிகிலாமையினு
லந்தணர்மகஞ்செய்தணிகைமால்வரைவா ழாறுமாமுகதயாநிதியே. (சகூ)

வேரலிற்பிறந்தசெந்தழலந்த வேரலைமுருக்கிடுஞ்செயல்போற்
பேருடற்பிறந்தகாமமிவ்வுடலைப் பிணிபடமுருக்குதென்செய்வேன்
சாரலிற்குறவர்கிழங்ககழ்குழியிற் றாளமோடணிகொள்வச்சிரமு
மாரவேநிரைக்குமருவிதாழ்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (ரு௦)

பிறந்திறந்துழலும்பெருவியாதியையும் பெரும்பசிநோய்சுடத்தளர்ந்து
நிறங்குலைந்தொருவர்பின்றிரிந்துழலு நிரப்பெனுங்குறுவியாதியையுந்
திறந்தருள்கடைக்கட்பார்வையாமருந்தாற் றீர்த்தருள்புரியுநாளுளதோ
வறம்பொருளின்பம்வீடருள்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (ருக)

திரைகடலுடுத்தநிலத்திடையழியாச் செல்வமுங்கல்வியுமறிவு
மிரப்பவர்க்கிலையென்றுரைத்திடாதுதவு மீகையுமெனக்கருள்புரிவாய்
புரக்குமைந்தருமாநிதிமணிகவர்ந்து புலவருக்கிடுக்கண்புரிந்த
வரக்கரையழித்தசெருத்தணிமலைவா ழாறுமாமுகதயாநிதியே. (ருஉ)

பனித்துடல்வெதும்பும்படிதவம்புரிந்து பாரெலாம்வலம்புரிந்துழல்வோர்
தனித்திருந்துனதுதிருவடிநினைந்து சர[illegible]பவெனவுரையார்
கனிப்பழமிருப்பவிடுத்தருகிருந்த காயினைப்பறித்தருந்துவரோ
யனித்தமுங்கடந்துநித்தமாந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (ருங)

விடுத்திடற்கரியபஞ்சபாதகமே விளைத்திடுமெனக்குமெய்வரங்கள்
கொடுத்திடலுனையார்தடுப்பவர்புரளுங் குரைகடறன்னையார்தடுப்பார்
முடுக்கருட்டவஞ்செய்யோகியர்தமக்கு முசுக்கலையேவல்செய்தொழுகு
மடுக்கலிற்சிறந்ததிருத்தணிமலைவா ழாறுமாமுகதயாநிதியே. (ருச)

குவிகரங்கொடுநின்றனைவலம்வரவுங் குறைகழன்மனநினைந்திடவுங்
கவியறிந்துன்சீர்பாடவுமெனக்குக் கருணைநீபுரியுநாளுளதோ
புவியிலந்தணர்களனைவருஞ்சாரற் புறத்திலேயணைந்தனுதினமு
மவிசொரிந்தியாகம்விளைத்திடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௫௫)

நச்சுமாமரமேயாயினுமொருவர் நானிலந்தன்னிலேவிழைந்து
வச்சமாமரமேயாயிடிற்றண்ணீர் வார்த்திடாதுலர்த்திடுமெவர்யார்
துச்சமாமாயைவினையுடலடுத்தாய் சுத்தவீடருள்புரிந்திடுவா
யச்சனோடனையாய்த்துணைசெயுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௫௬)

விலங்கலைக்கடலைவெய்யசூரத்தை விழுங்கிடவெறிந்திடுமயிலால்
கலங்கலைப்புரியுமாணவமாயை கன்மமூன்றையுமழித்திடுவா
யுலங்கலைத்தகர்க்கும்பன்னிருபுயத்தி னும்பர்நாடிறைதருங்கழுநீ
ரலங்கலைப்புனையுமொருதிருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௫௭)

முகத்திருவிழியுமூக்கிடையிருத்தி மூடிவாய்மூச்சையுட்செறித்துப்
பகைத்தவைம்பொறியுமடக்கிநெஞ்சிடையுன் பதமலரிருத்துநாளுளதோ
சகத்திருள்கடியுமுதையமால்வரையோற் றணிகைமால்வரைமிசையடிய
ரகத்திருள்கடியுஞானசூரியனு மாறுமாமுகதயாநிதியே. (௫௮)

நாண்டுறந்தெழில்சேர்நாரியர்கலவி நறவினையநுதினநுகர்ந்து
மாண்டிறந்துலகிலினிப்பிறந்திடினு மலரடிக்கன்பெனக்கருள்வாய்
கோண்டருமுலகநிலைகுலைந்தழிந்து குரைகடன்மேருவுமழியு
மாண்டுகம்பலவுமழிவிலாத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௫௯)

வெங்கொலைகளவுகாமமோடரும்பொய் விளங்கறிவகற்றுகள்ளருந்த
லிங்கொருதினமுமொழிந்திடாக்கொடியே னிடர்க்கடலேறுநாளுளதோ
பைங்கருங்குவளையநுதினமூன்று பாகசாதனன்சுனையலரு
மங்கதிசயஞ்சேரண்ணலந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௬௦)

வெஞ்சிறைப்பிறவிவேதனையொழித்த மெய்த்தவர்சேருநின்பதத்தென்
னெஞ்சிறைக்குடியாய்நின்றிடும்படிக்கு நீடருள்புரியுநாளுளதோ
மஞ்சிறையளித்தமகடனக்கிறையாய் வானுலகெலாம்வலம்வருவா
யஞ்சிறைக்கோழிக்கொடியனேதணிகை யாறுமாமுகதயாநிதியே. (௬௧)

செம்புயம்பனிரெண்டிருபதமாறு திருமுகமயிலயில்சேவல்
பைம்புயற்கூந்தல்வள்ளிதெய்வானை பாகமுங்காணுநாளுளதோ
கம்புயர்பருதிகரங்கொளுமுராரி கவின்பெறுமார்பினிற்பிரியா
வம்புயமலராண்மருகனேதணிகை யாறுமாமுகதயாநிதியே. (௬௨)

பிழைத்தவைபொறுத்தல்பெரியவர்கடனும் பேயனேன்பிழையெலாம்பொறுத்
தழைத்தருள்புரிந்துன்றாமரைமலர்த்தா டலைமிசையிருத்துநாளுளதோ [து
கழைத்தலைவளியினசைந்திடல்வரைதான் கையெடுத்தன்பரைக்கடுகி
யழைத்தருள்புரிவதெனப்படுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௬௩)

எவ்வுலகமுமாண்டிறந்திடாச்சூர னிருந்திடுமேயேந்திரபுரியாந்
தெவ்வுலகத்தையழித்தநின்கருணைச் செழுங்கடைப்பார்வைதந்தருள்வா
யிவ்வுலகத்தோர்பணிந்தெழுந்தேத்து மிதுவலாலிந்திரனுறையு
மவ்வுலகத்தோர்தொழவளர்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௬௪)

பரிகரியிரதம்பதாதிகள்சூழப் பகைவரைத்தடிந்துசெங்கோல்கொண்
டொருகுடைநிழலிலுலகெலாம்புரக்க வுனதருட்பார்வைதந்தருள்வாய்
பொருகரிமுகனுக்கிளையவனாகிப் பொன்னுலகினைப்புரந்தளித்தோ
யரிகரிமுனிவர்க்கேவல்செய்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௬௫)

மாதிரைகடல்சூழ்மண்ணகவரைப்பின் வாய்மையைத்துறந்துசாண்வயிற்றின்
றீதிரைக்குரியபொய்ம்மையேபேசித் திரியுமென்பவமொழிந்திடுமோ
மீதிரைத்தெழுந்துவருநிசாசரரை வென்றமரர்பதியளித்தோ
யாதிக்கிறைவனருள்செருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௬௬)

கருக்குழிபடிந்துபிறந்திடுதுயருங் கண்கள்பஞ்சடைந்துவாய்குழறி
நெருக்கியகபத்தாலிறந்திடுதுயரு நீசனேனொழியுநாளுளதோ
தருக்களினுதிரும்பொன்மலர்களுலித் தமனியமலையெனக்கருதி
யருக்கனுமதியும்வலம்வருந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௬௭)

தீர்ப்பதற்கரியவுடலபிமானந் தீர்ந்தருந்தவம்புரிந்தவரும்
பார்ப்பதற்கரியபங்கயமலர்த்தாள் பாவியேற்குண்டுகொல்கதிரோன்
றேர்பரித்திரளைவேங்கைமீதகவும் செம்முகமந்திவானீட்டி
யார்ப்பரித்தடித்துநடத்திடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௬௮)

வெம்பியாய்வயிற்றிலையிருதிங்கண் மேவியிப்புவிதனிலுதித்து
நம்பியாயிழையார்கலவியிற்றிளைக்கு நாயினேற்கருளிபமுகத்தோன்
றம்பியாயடுத்தநீயிருத்தலினுற் றரணியோர்பிறவியங்கடலுக்
கம்பியாயடுத்துவளர்திருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௬௯)

வாளிகல்புரியும்வடிவெகிர்நெடுங்கண் மங்கையர்போகமேநுகர்ந்து
நாளிகந்தொருவிநரகிடைவிழாம னாயினேன்றனக்கருள்புரிவாய்
கூளிகடுரக்குந்தானவக்குழுவிற் குஞ்சரக்குழுவிரிந்தோட
வாளிகடுரக்குஞ்சாரலந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௭0)

மெய்க்கினியனவேசெய்துநல்விரதம் விடுத்துழல்மடமையேன்வீட்டிற்
புக்கினிதிருக்குமடியவர்கமலப் பொன்னடிகருதுநாளுளதோ
கொக்கெனத்தினமுங்கொலைகுறித்தொழுகுங் கொடியதானவர்களைத்துணிக்க
வக்கினிகரத்திலுதித்திடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௭௧)

கருடனைநினைக்கத்தொலைந்திடுவிடம்போற் கானகத்தினைப்புனக்குறத்தி
திருடனென்றுன்னைச்செப்புவோர்பிறவித் தீவிடமக்கணத்தறுமே
யொருகணப்பொழுதின்மதுரையர்பெருமா னுடலுறுவெப்பெலாமகற்றி
யருகரைக்கழுவிலேற்றிடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௭௨)

கொங்கையங்குவடுங்கருவிழிக்கடலுங் கூந்தலங்காடுஞ்சென்றுலவி
மங்கையரல்குற்பணிவிடந்தீண்டி மயங்குமென்னுயிர்தனைப்புரப்பாய்
சங்கையொன்றில்லாப்பிரணவப்பொருளைத் தமிழ்வரைகுறுமுனிவரனுக்
சங்கையினெல்லியெனப்புகறணிகை யாறுமாமுகதயாநிதியே. (௭௩)

வானகம்புரக்கும்வாழ்வையும்விரும்பேன் மண்ணகவாழ்வையும்விழையேன்
கானகக்குறவர்போற்றுநின்பாத கமலமேகருதுவன்றமியேன்
போனகம்பதினாலுலகமுமாக்கும் பூவைவண்ணன்றிருமருகா
வானகந்துடியோடார்த்திடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௭௪)

கொவ்வையங்கனிவாய்மகளிரையணைத்துக் கொம்மைவெம்முலைந்தடத்தழுந்தி
நவ்வியம்பகமாங்கூற்றினுக்கிரையாய் நானழிந்தொழிகுவதழகோ
செவ்வியமறையோர்சோலைகடோறுந் தீயினாகுதிமகம்புரிய
மவ்வியகவியநுகர்திருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௭௫)

கூம்பலங்கரமுங்குழைந்திடுமனமுங் கொண்டனுதினம்வலம்புரிவோர்
தாம்பலன்பெறும்பேறரியயன்றனக்குஞ் சாற்றரிதெனமறையுரைக்கும்
பாம்பலங்காரப்பரனெனமுத்தம் பற்பலசொரிந்துவானோங்கு
மாம்பலஞ்சாரல்வளர்திருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௭௬)

விடங்கலந்திடுதீம்பாலெனவுயிரை விரவுமாணவத்தினைப்போக்கி
நடங்கலந்திடுமுன்சீறடிக்கமல நன்மருந்தளித்தெனைப்புரப்பாய்
மடங்கலுங்கரியுமுழுவையுந்தவஞ்செய் மாதவர்தமக்குவானரங்க
ளடங்கலும்பணிசெய்தகமகிழ்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௭௭)

விடைமிசைவருநின்றந்தைதன்செவியில் விளம்பியபிரணவப்பொருளைக்
கடையனேன்செவியிற்புகன்றுநின்கமலக் கழற்றுணைநீழலென்றருள்வாய்
தடையறுகதிர்த்தேர்ச்சாரதிபரியைத் தாக்குமுட்கோல்படவேய்த்தே
னடைகிழிந்துகுதேனருவிதாழ்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௭௮)

வல்லகாத்திரஞ்சேர்மதகரியெனவே மறைநெறிகடந்துதீவினையாற்
பல்லகாத்திரமாய்ப்பிறந்திறந்துழலும் பாவியேனுய்யுநாளுளதோ
நல்லகாத்திரியாவிந்திரன்றெருட்ட நறுஞ்சுனைநீலமேவுதலா
லல்லகாத்திரியாம்பெயர்பெறுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௭௯)

நந்தினைப்பதுமநிதியினைப்பழித்த நறுங்களமுகத்தியர்கலவித்
தந்தினைப்படித்துவிடரொடுந்திரியுந் தமியனேனுய்யுநாளுளதோ
சந்தினையகிலைவேங்கைகுங்குமத்தைத் தடிந்தெரிகொளுவிவேட்டுவர்க
ளந்தினைவிதைக்குஞ்சாரலந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௮௦)

மாடகத்திவவியாழ்முனியுரைப்ப வள்ளிமால்வரைப்புறத்தடைந்து
காடகக்குறமான்றனைப்புணர்வேடங் கனவிலுநனவிலுமறவே
னேடகக்கமழ்நீரென்றுமூன்றலர வெனக்கிலையெனத்தலையிறங்கி
யாடகக்கிரிநாணுறுந்திருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௮௧)

சமயமூவிரண்டிற்சார்ந்தவர்புகலுஞ் சமுசயப்பொருளெலாநினைந்து
கமையறுபிறப்பிலழிந்திடாதுனது கழலிணைகருதுநாளுளதோ
விமையவர்வேடர்க்கமுதமீந்திருவி னிரும்பிழிகவர்ந்தெதிர்விருந்தா
யமைவுறவிசும்பின்வளர்ந்தெழுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௮௨)

பொருந்திடுகற்பின்மனைவியும்பொருளும் புதல்வருமிம்மையிலளித்துத்
திருந்துமொண்கதியையம்மையினளிக்குந் திறத்தினைக்கண்டுனையடுத்தேன்
வருந்துறுபிறப்பிலழுத்துமாணவமா மலிபெரும்பகைதடிந்தோங்கு
மருந்தவர்க்கரணமாயமர்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௮௩)

கூனையுந்தெரியாக்குருட்டையும்பணிவோர் கொடியவெஃபிறப்பையுநீக்கி
வானையுஞ்சிந்தாமணியையும்வேண்டும் வரத்தையுந்தருதல்கண்டடுத்தேன்
றேனையுமறையோர்க்கரசரீந்திடுபொற் றிரளுறுதானநீர்த்துனையும்
யானைமும்மதநீர்கொண்டிழிதணிகை யாறுயாமுகதயாநிதியே. (௮௪)

முன்னையெத்தவத்தோவந்துமானிடத்தின் முழுதுடறன்னையானெடுத்தும்
பின்னருற்றிடுதற்கரியவிப்பொழுதே பெருந்தவம்புரிந்துனைநினையேன்
றென்னிசைக்களிவண்டினங்கள்பற்பலவாந் தேனடைமொய்ப்பவாதுலர்சே
ரன்னசத்திரங்கணிகர்த்திடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௮௫)

விரிந்திடும்பிறவிக்கடலகத்தழுந்தி வினையெனுந்திரைகளாலலைந்து
திரிந்திடுகாமச்சுறவினாலயருந் தீயனேன்றுயர்களைந்திடுவாய்
வருந்திடும்பகையைமாய்க்குமன்னவர்போல் வனசரர்விதைத்தசெந்தினையை
யரிந்திடக்கணிகளலர்ந்திடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௮௬)

தத்தலைக்கடலின்வேறுவேறாகுஞ் சமுசயச்சமயநூல்பலவுங்
கத்தலைவிடுத்துன்கழறலைச்சூட்டிக் கசிதலையடையுநாளுளதோ
முத்தலையேகபாதருத்திரன்போன் முத்தலைபொன்மைவெண்ணிறமா
யத்தலைமுதலொன்றாயெழுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௮௭)

வரம்பெறுமகவான்முதலியோரொருபால் வணங்கமாமுனிவரரொருபால்
சிரம்பெறுகரங்கள்கூப்புநின்னவையிற் சிறியனும்வரவருள்புரிவாய்
மரம்பயில்சாரல்வளர்க்கழைவெடித்த மணிகள்வாசவனெதிராடு
மரம்பையர்முலைமேற்றெறித்திடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௮௮)

சுந்தரந்தனக்கோநினதுதோள்வலிக்கோ சொற்கலைவல்லபந்தனக்கோ
சந்ததமெனதாருயிரெனுமடந்தை சாமிநின்கலவியேவிழைந்தாண்
மந்தரமிமையக்கயிலைநீள்கந்த மாதனங்கண்டமுக்கறுப்ப
வந்தரங்கமதாயிருந்திடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௮௯)

குறித்தொருகவிநீபாடெனப்பாடாக் கொள்கைநக்கீரனைவேண்டி
மறித்தொருகவிக்காயிரந்தநின்றனையான் வலுவினிற்பாடவுமிரங்காய்
கறிக்கொடிமிளகைத்தின்றிலமந்தி கலங்கிடக்கடுவன்மாங்கனியை
யறுத்துவந்தளிக்கமகிழ்திருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௯0)

நெல்விளைந்திடுதண்பணைதொறுமறுப்பு நென்முதனடவுமாறுப்போற்
புல்லியம்புயனுற்பிறப்புடனிறப்புப் பொருந்துதீவினைதுலைத்திடுவாய்
எல்லியும்பகலுங்கழையுதிர்முத்த மிளநிலாக்கதிர்பரப்புதலா
லல்லியுங்குவலையொடுமலர்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௯௧)

வேனில்வேளெனவும்விசையனேயெனவும் வீமனேயெனவுமீகில்லாப்
பாகலந்தெரியாச்சிதடரைப்புகழும் பாவலர்பவப்பிணியறுமோ
தேனிறால்வருடைபாய்தரக்கிழிந்து செங்கழுநீர்ச்சுனைநிரப்பி
யானைவீழ்குழியுநிரப்புறுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௯௨)

காரிருட்குழலார்கண்வலைதுடக்குஞ் சகடனேன்சிற்றறிவொழித்துன்
பேரருட்பார்வைக்கடலகத்தழுத்திப் பிரிவிலாவாழ்வெனக்களிப்பாய்
கூரிருள்படைத்தகிரவுஞ்சகிரியுட் குறுமுனிகுறுகல்போன்முனிவ
ராரிருட்குகையுட்புகுந்திடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௯௩)

கரவினிலருநூல்கற்பவருறவைக் கடிந்துமெய்த்தொண்டர்பான்மிகுமா
தரவினைமருவியுடலபிமானந் தனையொழித்திடுநெறியருள்வா
யிரவினிற்கரடிகுரும்பிதேர்ந்தளையை யிடத்தலுமுழ்கைபோலெரியு
மரவின்மாமணிகண்டஞ்சிடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௯௪)

வாரியங்கடல்சூழ்மலர்தலையுலகில் வயிறுசாண்வளர்த்திடும்பொருட்டுப்
பாரியென்றீயாதவரையான்புகழாப் பணிவிடையெனக்கருள்புரிவாய்
வீரியம்பெறுவெம்புலியினோடிரலை வேழமோடரிபகையொருவி
யாரியம்புகல்வோர்க்கேவல்செய்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௯௫)

மலையெனவளருமாணவமலத்தை வளம்பெறுநின்னருட்பார்வை
யிலைமலிவேலாலெறிந்ததைப்போக்கி யெனதுயிர்தனைப்புரந்தளிப்பாய்
கொலையரிமுழக்குங்குஞ்சரமுழக்குங் குலவுமந்தணர்மறைமுழக்கு
மலைகடன்முழக்கினெதிரெழுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௯௬)

கமலவேதனைமுன்கற்சிறைப்படுத்துங் காங்கெயனுமுனைவணங்கா
முமலவேதனையுமொருசிறைப்படுத்தி முண்டகப்பதமெனக்களிப்பாய்
விமலவேதியர்செய்வேள்வியாகுதியில் வீசுநெற்பொரியெனச்சார
லமலவேய்முத்தஞ்சொரிதிருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௯௭)

சந்திரன்கறைபோலிந்திரன்விழிபோற் சந்தனமரத்துறுமகிபோன்
மந்திரம்பயிலுமுனதுசன்னிதியில் வருங்கொடியேனையும்புரப்பா
யிந்திரநீலமருவலாற்கருமையேந்தலாற்செவியடுத்திடலா
லந்தில்தெய்வானைவிழிநிகர்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௯௮)

பிணியினாலழலாலலகையால்விலங்காற் பில்லிசூனியத்தினாற்பித்தால்
பணியினானீராற்கள்ளரான்மருவும் பருவரலகற்றியாண்டருள்வாய்
கணியினாலாரம்புடைபரந்தெழலாற் காம்பினால்வம்பினாற்காந்த
ளணியினாற்குறமான்முலைநிகர்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௯௯)

வள்ளியுந்தெய்வயானையுமிருபான் மருவிடச்செங்கைவேலேந்தி
துள்ளியமயின்மீதேறிநீயடியேன் றனைவிழிகாணவந்தருள்வாய்
வெள்ளியங்கிரிபோனாரதன்றினமும் வீணையின்கானமாமமுத
மள்ளியஞ்செவியினிறைத்திடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௧௦௦)

தணிகை தயாநிதிமாலை—முற்றிற்று.

பண்ணார்தணிகைவரைப்பாலன்றயாநிதிச்சீ
ரெண்ணாருமாலையிசைத்திட்டான்-றண்ணாருங்
காசினியெலாம்புகழுங்கந்தப்பனென்றுரைக்குந்
தேசிகனுநூறுகவிதேர்ந்து.